**கொழும்பு பல்கலைக்கழகம் - 2023**

---------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கப்பட்ட, பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தின நிதிக்கூற்றுக்கள் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பெறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய 30/94 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2019 ஜுலை 25 ஆம் திகதிய SC&PMU/Grant/19 ஆம் இலக்க வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அறிவிப்பிக்கப்பட்டு அதன் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ளாது மீளாய்வாண்டில் ரூபா 339,691,267 தொகையான வெளிநாட்டு மானியங்கள் நேரடியாக பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இவை பண நன்கொடைகள் அல்ல என்பதுடன் பல்கலைக்கழகத்தின் செயற்திட்டங்கள் / ஆராய்ச்சிகள் ஆகியவற்றுக்காக கிடைத்த பணம் என்பது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2020 அக்டோபர் 26 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 02(v) ஆம் பந்தி | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் பதவிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சம்பள குறியீடுகளில் சம்பள அளவுகளை விஞ்சி 2020 முதல் 2023 திசெம்பர் 31 வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட 02 பதவிகளின் 03 உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழகத்தினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமாக ரூபா 19,577,232 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | சேவையின் தேவைப்பாடு மற்றும் சந்தைப் பெறுமதியின் பிரகாரம் உயர்வான சம்பளம் ஒன்றினை வழங்க நேர்ந்துள்ளமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் v அத்தியாயத்தின் 7 ஆம் பந்தி | பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய 35 பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 159,907,138 கூட்டுத்தொகை 01 முதல் 34 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது. | இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளமை. | பிணைமுறி உடன்படிக்கைகளை மீறிய பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அளவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஜனவரி 18 ஆம் திகதிய BD/HRD/126/214/19/2023 ஆம் இலக்க திறைசேரி செயலாளரினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு முகவரி இடப்பட்ட சுற்றறிக்கை கடிதத்தின் 5 ஆம் பந்தி | பிணைமுறிகளை மீறிய பேராசிரியர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 135,987,614 தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதியங்களை அனுமதி பெற்ற நோக்கங்களுக்கு மாத்திரம் பொருத்தமானவாறு பயன்படுத்தி உள்ளமையால் திறைசேரிக்கு மாற்றப்படவில்லை என்பது. | திறைசேரியின் அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 977,902,106 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,330,270,379 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,352,368,273 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டிருந்தது. இந்த வீழ்ச்சிக்கு அரசின் மூலதன மானியங்கள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சட்ட ரீதியான அங்கீகாரம் ,ல்லாத பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் பதவியியை ஈடுபடுத்தி பிணையினால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று 2013 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பின்னர் 5 வருடங்களின் பின்னர் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுக்களை வருடாந்தம் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கம்பனியின் ஒரு நிதிக்கூற்றேனும் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனி ஈட்டிய வருமானத்தில் பல்கலைக்கழகத்திற்கு வழங்க வேண்டிய பங்களிப்பு தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிடாத காரணத்தால் கடந்த 9 வருட காலப்பகுதியினுள் ரூபா 1,885,690 மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் எந்த ஒரு வெகுமதி வருமானமும் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் | வெகுமதி வருமானங்களை ஏனைய வருமானங்களில் உள்ளடக்கி உள்ளமை. | உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் வருடாந்தம் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் பல்கலைக்கழகத்திற்கு வருமானம் அறவிடுவதற்கு மற்றும் புலமை ஆவணங்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழகத்தின் புலமை சொத்து கொள்கையின் பிரகாரம் கம்பனியின் புதிய ஆக்கங்கள் பதிப்புரிமை உள்ளடங்களாக புலமை ஆதனங்கள் பல்கலைக்கழகத்தின் ஆதன குழாத்தினுள் உள்ளடக்கப்பட்டு, அவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கல்விசார் பதவியணிக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 8,194,808 தொகையான 13 ஆராய்ச்சிகளை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்ட திகதியை விஞ்சி 1 வருடம் முதல் 4 வருடங்கள் வரை ஆன காலம் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 முதல் 2020 வரையான காலப்பகுதியினுள் ரூபா 8,821,000 பெறுமதியான 17 ஆராய்ச்சிகள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்டமை மற்றும் இரத்து செய்யப்பட்டமை இடம்பெற்றிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை ஏனைய ஆராய்ச்சி பணிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிகளை உரிய காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 25,518,200,000 பெறுமதியான 8 காணிகள் மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டிராத 4 காணிகளின் சட்ட ரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சுவிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் உரித்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு உரிய நடவடிக்கைகள் தொடர்ச்சியாக பல்கலைக்கழகத்தின் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தாமதம் நிலவுவதற்கு ஏனைய நிறுவனங்களான பிரதேச செயலகங்கள் போன்றனவே காரணமாக அமைந்துள்ளன. | காணிகளின் சட்ட உரித்தினை சுவிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 நிதியங்களின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 117,946,258 கூட்டுப்பெறுமதியான 44 நிதியங்கள் (Designated Funds) மீளாய்வாண்டினுள் உரிய நோக்கத்திற்கான பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபாய் 441 மில்லியன் மட்டும் மூலதன (Capital) செலவினங்களுக்காக ரூபா 392 மில்லியன் செலவிடப்பட்டுள்ளமை. | உரிய நிதியங்களை நோக்கத்திற்கு உட்பட்ட பணிகளுக்கு ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். |